JL
LLm211, N59HP.
NH.
223999

# ...மியோ பிரகடனம்

# ...OMEO BULLETIN

SIMILIA SIMILIBUS CURENTUR

Mch. உண்மையே உயர்விக்கும் 1961.


# HOMOGRIPE




ஹோமியோபதி 'கிரைப்வாட்டர்'
குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு
சிறந்தது. உடம்பு இளைத்தல்
சீரணக் கோளாறுகள் குணமாகும்.

ஹானிமான் ஹோமியோ
இன்ஸ்டிட்யூட்,
திருவாரூர்.
தபால் பெட்டி நெ. 1...

# ஹோமியோ பிரகடனம்.

## (HOMEO BULLETIN)

பிரதி ஆங்கில மாதம் 15-ம் தேதி
வெளியிடப்படும்.

சந்தா விபரம்:
வருடச் சந்தா ரூ. 3/-
தனிப் பிரதி அணு 0—4—0.

வெளியிடுபவர்:
*பிரின்ஸ்பால்* S. SRINIVASAN,
*ஹோமியோ, பிஸிஷியன் & ஸர்ஜன்,*
ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,
திருவாரூர்.

உங்கள் அறிவையும், அனுபவத்தையும்
வளரச்செய்யும்

# ஹோமியோ பிரகடனத்தின்

## ச ந் தா தா ர ரா க

## நீங்கள் சேர்ந்துவிட்டீர்களா ?

இல்லையென்றால் உடனே கீழ்க்கண்ட பாரத்தை பூர்த்திசெய்து உடனே ரூ 3/-வருஷ சந்தாவை அனுப்பிவையுங்கள்.

தென்னிந்தியாவிலேயே சிறந்ததொரு
மாதப் பிரகடனம் இதுதான்.

நெ. தேதி.................

பெயர்.............................................................

முழு விலாசமும், தொழிலும் } ..............................................

சந்தாத்தொகை.......................ம். ஆ. நெ............

## பொருளடக்கம்.

☆


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வரிச்சுமை | 1 |
| 2. | ஹிஸ்டிரியா (தொடர்ச்சி) | 3 |
| 3. | கேள்விப் பெட்டி | 5 |
| 4. | வட்டாரச் செய்திகள் | 10 |
| 5. | அனுபவக் கேஸ் | 12 |
| 6. | 'திருக்குறளார்' கூறிய ஹோமியோபதியர் | 13 |

## நமது மதராஸ் பிராஞ்சு.

3, தம்புச்செட்டித் தெருவில் (ஹைகோர்டிற்கு நேர் எதிரில்) 1958-ஆம் மார்ச்சு மாதம் முதற்கொண்டு நமது இன்ஸ்டிட்யூட்டின் மருந்து விற்பனை இலாகா ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது.

சென்னை, மற்றும் பக்கத்து ஊர்களிலிருந்தும் ஹோமியோபதி டாக்டர்கள் யாவருக்கும் சுலபமாக மருந்துகள் எல்லாவிதமும் கிடைக்கும்படி பெரும் அளவில் ஸ்டாக் செய்திருக்கிறோம்.

உங்கள் ஒத்துழைப்பிற்கும் எங்கள் வணக்கம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223999.
சென்னை-600 008

## வரிச்சுமை.

### ஹோமியோபதி மருந்துகளின் விலையேற்றம் நாட்டு மக்களின் நலனுக்காகவாம்!

ஹோமியோபதி டாக்டர்களே!
பொதுமக்களே !!

மக்கள் நலனுக்காக என்று நம் பாரத சர்க்கார், நம்மால் பொறுக்கி அனுப்பப்பட்ட பாரத சர்க்கார் இவ்வாண்டு 1—3—61 முதற்கொண்டு அனேக பொருள்களின் மேல் வரிச்சுமையை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். 3-வது ஆண்டு திட்டத்தில் மக்களின் சுபிட்சத்திற்காக வரிகள் போடப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் இவ்வரிகள் போடப்பட்டிருப்பதனால் பொதுமக்கள் எவ்வளவு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

நமது மருந்துகளைப் பொருத்தமட்டில் பாட்டில்களுக்கு எக்ஸைஸ் வரி.

பாட்டில் தயாரிக்கப்படும் சோடாவிற்கு வரி.

லேபிள் அச்சடிக்க உபயோகப்படுத்தப்படும் காகிதத்திற்கு வரி.

அச்சடிப்பதற்காக உபயோகிக்கும் சாயம், வார்னீஷ்களுக்கு வரி.

காகிதம் தயாரிக்கப்படும் மூலப்பொருள்களுக்கு வரி.

மருந்துகள் தயாரிக்கப்படும் மூலப்பொருள்களுக்கு வரி

தொழிலாளிகளின் அன்றாடத் தேவையான காப்பி, மண்ணெண்ணெய், புகையிலை, துணி முதலானவைகளுக்கு அதிக எக்ஸைஸ் வரி.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தயார்செய்யப்பட்ட மருந்துகளுக்கே வரி!

மற்றும் தபால் செலவு, பார்சல் செலவு, ரயில்வே கட்டணம் எல்லாமே அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவ்வெல்லா வரிகளும் நமது தலையில் சுமத்தப்பட்டு விட்டன.

தொழிலாளிகளுக்கு சாமான்கள் உயர்வினால் சம்பள உயர்வு, ஊதிய உயர்வினால் தயாரிப்பு செலவில் அதிகப்படுதல், மருந்துகளுக்கு தேவையான லேபிள், லேபிள் அச்சடிக்கும் கூலி, பாட்டில் எல்லாவித தீர்வைகளும் சேர்ந்து மருந்தின் விலை மிகவும் உயர்த்தப்படவேண்டிய அவசியம் ஏற்படுத்தப் பட்டு விட்டது.

இக்காரணங்களால் ஹோமியோபதி டானிக்குகள், மருந்துகள், இன்செக்ஷன்கள் முதலியவற்றின் விலை குறைந்த பட்சம் 25% ஆவது உயர்த்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

ஆகவே ஹோமியோபதி டாக்டர்களே! பொது மக்களே! நமது பாரத சர்க்காரை வாழ்த்துங்கள். நமது வாழ்க்கைத் தரம் உயர்வுகிறது. வரியும் உயர்ந்துகொண்டே போகிறது. ஹோமியோபதி மருந்துகளின் விலையும் உயர்கிறது.

இவ்விலை உயர்வு டிஞ்சர்கள், திராவகங்கள், ஆல்கஹால் கலந்த ஹோமியோபதி மருந்துகளுக்கு இல்லை.

---



# ஹிஸ்டிரியா.

## (தொடர்ச்சி)

**ஆசிட் பாஸ்:** நரம்புத் தளர்ச்சி, பொதுவாக அசதி, அசட்டை, தூக்கமின்மை முதலியன இருக்கும். வியாதி, மனோ வியாதி, கவலை முதலியவற்றினால் ஏற்படுவது. ஏராள வியர்வை.

**பிளாட்டினு:** திமிர் பிடித்தவள், குணம் அடிக்கடி மாறுபடும். ஏராளமான மாதவிடாய் (பெரும்பாடு) திருப்தி யடையாத இச்சை.

**பல்ஸாடில்லா:** ரொம்பவும் மனத் தளர்ச்சி, பொது வாக பலவீனம், இரத்த ஓட்டத்தில் பலவீனம், அடிக்கடி குறிகள் மாறுபடுவது, பெண் ஜனன உறுப்புகளும் சீரணக் கருவிகளும் அடிக்கடி தாக்கப்படும்.

**சாபடில்லா:** தொண்டை, மார்பு முதலான இடங் களில் இருக்கும். பொதுவாக நரம்பு பலவீனம். குறிகளை தப்பாக கணக்குப் போடுவாள். உதாரணமாக கருப்பம் இருப்பதாக நினைப்பு.

**சீகேல்:** இரத்தக் குழல்களில் வேலை செய்து அவை களைச் சுருங்கச் செய்கிறது. சுரணையை மறக்கச் செய்கிறது. சில சமயங்களில் பட்ச வாதமும் வந்துவிடுகின்றன. பிரசவ நேரத்திலும் அதற்கு பின்னும் [illegible] அவயவங்களை பாதிக்கும்.

**செபியா:** மஞ்சளான, வாடி வதங்கின முகம். சிற் சிலசமயம் ஆத்திரம், ஒற்றை தலைவலி, வயிறு குடல் குறி களுடன் பலவீனம், கருப்பை முன் பிதுங்குதல், ஆண்குறி களிலும் வேலை செய்யும்.

ஸ்டானம்: துளிமுயற்சி செய்தாலும் அதிபலவீனம், முதுகு பலவீனம் சிறிது சிறிதாக அதிகமாகும். சுருட்டி இழுத்து பிடிக்கும் வலிகள் வயிற்றிலும், கருப்பையிலும் காணப்படும். பொதுவாக மஞ்சளான, வெள்ளையான பல வீனப்படுத்தும் வெள்ளை. கருப்பை பிதுங்குதல்.

ஸ்டாபிசேகிரியா: கோபம், நாட்பட்ட வருத்தம். முக்கியமான காரணங்களால் சிறிது மன அதிர்ச்சியும் குறிகளை அதிகரிக்கும். நரம்புத் தளர்ச்சியும், உடல் தளர்ச்சியும் அதிகமிருக்கும். தோல் வியாதிகள் உண்டாகும். யூரிக் ஆசிட் உப்புகள் அதிகப்படும்.

சம்புல்: குணம் திடீர் திடீரென மாறும். படபடப்பு வயிற்று உப்பிசம் அதிகரித்த காம இச்சை முதலியன இருக்கும்.

டாரன்டுலா இஸ்: மிகவும் அமைதியின்மை, உடலின் பல அவயவங்களில் துடிப்புகள், உள்ளூற பட படப்பு. பல வீனத்துடன் மனத் தளர்ச்சி, வயிற்றினின்று நெஞ்சுவரை பந்துபோன்ற அடைப்பு, எச்சில் ஊறல், குமட்டல், சில சமயம் வலிப்புகள்.

சிங்கம்: தசைகளில் வலிப்புகள், இழுத்துப் பிடித்தல், கால்களில் ஓயாத ஆட்டம், அமுக்கப்பட்ட போக்குகள் காரணங்களாகும். தூக்கமின்மை சதா இருக்கும்.

தாஸ்பியம்: மனக்குறிகள் அடிக்கடி மாறும். அவயவங்களில் வலிப்புக் குறிகள், பெண் ஜனன உறுப்புகளில் அவயவ மாறுபாடு.

(முற்றும்)



# ... கேள்விப் பெட்டி ...

## அறிவிற் சிறந்த பதில்கள்.

கேள்வி 1. அலோபதியில் பாக்டீரியா, வைரஸ் முதலியவைகளால் உண்டாகும் வியாதிகளை இரத்தப் பரீட்சை, நீர் பரீட்சை, மலப் பரீட்சை, கோழைப் பரீட்சை செய்து தீர்மானிக்கின்றனர். இவ்வாறான பரீட்சைகளின்றியே ஹோமியோபதியில் குறிகளைக் கொண்டே நோய்களுக்கு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே நம் முறைகளிலும் இவ்வித பரீட்சைகள் அவசியமா? நம் முறையில் குறிகளைக்கொண்டு மருந்துகள் தரும் போது சிறு நுண்ணிய பாக்டீரியாக்கள் அகப்படுகின்றனவா? அலோபதி ஆண்டிபயோடிக் போன்று நம் மருந்துகளும் சக்தி வாய்ந்தவைதானா? உதாரணத்துடன் விளக்கங்கள் கொடுத்து தயவுசெய்து பதிலளியுங்கள்.

பதில் 1. ஹோமியோபதி முறையிலும் கோழைப் பரீட்சை, இரத்தப் பரீட்சை, மலப் பரீட்சை முதலியன அவசியமாகும். இப்பரீட்சைகளால் வியாதி எவ்வளவு தூரம் அவயவங்களைத் தாக்கி இருக்கிறது என்பது தெரிய வரும்.

அவயவங்களில் மாறுபாடுகள் ஏற்பட்டு விட்டால் மருந்தால் மட்டும் நிவர்த்தி செய்வதென்பது முடியாத காரியம்.

1920-ல் நியூயார்க் ஹோமியோபதி மெடிக்கல் காலேஜ் ஆதரவில் கினிபிக், ஈ முதலியவற்றைவைத்துக் கொண்டு ஆராய்ச்சி நடத்தினர். பொறுக்கப்பட்ட ஈ

டிராஸோபியா என்ற கட்டி உண்டாகி மரிக்கும் பழ ஈ வகையைச் சேர்ந்தது. (ஆனால் துரதிருஷ்ட வசமாக இந்த ஜாதி ஈக்களில் ஆண்களுக்கு மட்டுமே கட்டி வரும்) இதற்கு வரும் கட்டிகள் கான்சர் நோயைச் சார்ந்தவை. ஆகவே ஆண்களுக்கு கட்டி வந்தவுடன் பாதி ஈக்கள் முட்டையினின்று வெளிவந்தவுடனே மரித்துவிடும்.

டாக்டர் மேரிஸ்டார்க் அம்மையார் ஈக்களை லட்சக் கணக்கில் வளர்த்து ஆராய்ச்சி செய்தார்.

ஆண் ஈக்களுக்கு வரும் கட்டியையே அறுத் தெடுத்து சுத்தம் செய்து மருந்தாக உபயோகப்படுத்தப் பட்டது. ஆர்ஸனிகம் முதலியன மருந்தாக கொடுக்கப பட்டது. இவைகளால் 4 தலைமுறைகளுக்கு கட்டி வரும் தேக வாகு சொஸ்தமாகி விட்டது.

இதினின்று நாம் அறியக்கூடியது பரம்பரையாக வரக்கூடிய தேக வாகுகளை ஹோமியோபதி முறையால் தடுக்கமுடியும்.

ஹோமியோபதி மருந்துகள் அவயவ மாறுபாடுகள் செய்யக்கூடும்.

டாக்டர் பேட்டர்சன் என்பவர் மனிதனின் குடல்கிருமி களைப் பற்றி தீவிரமாக ஆராய்ச்சி செய்தார்.

அதிலிருந்து நாம் அறிவது (1) குடல் கிருமிகள் வியாதிக்கு தக்கபடி மாறுபட்டு காணப்படுகின்றன.



(2) குடல்களின் 'பீ காலை' போன்ற கிருமிகள் குணத் தில் மாறுபட்டு வியாதியை உண்டாக்கக்கூடியனவாக மாறு கின்றன.

டாக்டர் பெட்டர்சன் அநேக ஹோமியோபதி மருந்து களை குறித்து குடல் கிருமிகளை அவை எப்படி மாற்று கின்றன என்பதைப் பற்றி விரிவான ஆராய்ச்சி நடத்தினார். உதாரணமாக லைகோபோடியம் கொடுத்தால் மார்கன் கார்ட் னர் அளவு மாறுபடுகிறது.

இம்மாதிரி ஆராய்ச்சியின் பலனாக குடல் கிருமிகள்கூட பல முக்கியமாக ஏழு வகைகள் ப்ரூவ் செய்யப்பட்டு உபயோ கத்திலிருக்கின்றன.

ஆகவே குடல் கிருமிகளில் எவை சாதாரண நிலையைக் காட்டிலும் அதிகமாக இருக்கின்றன என்பதை பூதக்கண்ணாடி மூலம் அறிந்து அதற்கேற்ற ஹோமியோபதியில் மருந்துகள் கொடுக்கப்படுகிறது.

அதேமாதிரி இரத்தப் பரிசோதனையை எடுத்துக் கொள்வோம். மேலெழுந்த வரிசையாக பார்க்குமிடத்து இரத்த சோகையாக தோன்றுபவனிடத்தில் அனேக விதங்கள் இருக்கின்றன. வெள்ளை செபிகள் சிறுத்து இருப்பது, பெருத்து இருப்பது, எண்ணிக்கையில் அதிகரித்திருப்து, குறைந்திருப்பது, முழு வளர்ச்சியடையாமல் இளங்செபி களாகவே இரத்தத்தில் காணப்படுவது, வெள்ளை செபிகளே புற்று நோயால் தாக்கப்படுவது, இவைகளைத் தவிர சிவப்பு செபிகளின் உருவத்தின் மாறுபாடுகள் முதிர்ச்சி அடையாத செபிகள் காணப்படுவது முதலானவைகளும் பொதுவாக இரத்தசோகை யென கூறப்படும்.

"இளைத்தவன், இரும்பு தின்னவேண்டும்" என்ற புராதன பழமொழி முழுதும் சரியல்ல. நமது ஆசிரியர் அநேக ஆராய்ச்சிகள் நடத்திஇருக்கிறார். இரத்த கெபிகளில் மாறுபாட்டை உண்டாக்கக்கூடிய லாகெசிஸ், பெனிசிலியம், கார்சி நோசின் முதலான மருந்துகள் அனுபவத்தில் மருந்துகளாக தயார்செய்து ஹோமியோபதியர்க்கு ஈந்திருக்கிறார். உதாரணமாக மாலிப்டீனம் என்னும் உலோகம் ஹோமியோபதி முறையில் இன்செக்ஷனாக கொடுக்கப்பட்டால் எலும்பு மத்தியில் காணப்படும் இளம் இரத்த வெள்ளை கெபிகள் இரத்தக் குழல்களில் முதிர்ச்சியடையு முன்பே ஏராளமாக வந்து சேர்ந்து விடுகின்றன. இது ஒரு கடுமையான இரத்த சோகை வியாதி.

ஸல்பதயோசல் என்ற இன்செக்ஷன் மருந்து நமது லாபொரட்டரியினின்று தயார் செய்யப்படுவது உங்களுக்குத் தெரியும். 1940-ம் ஆண்டு "ஸல்பாநிலமைடு" என்ற மருந்து இங்கிலாந்து தேசத்தில் 200 நபர்களுக்கு கொடுக்கப்பட்டு ப்ரூவ் செய்யப்பட்டது. நமது ஆசிரியரின் ஸல்பதயோசால் என்ற மருந்து அதனைவிட தீவிரமாக வேலைசெய்கிறது. வெள்ளை கெபிகளின் எண்ணிக்கையை மிகவும் குறைவுபடச் செய்து இரத்த சோகையை இம்மருந்து உண்டாக்குகிறது. ஆகவே போட்டன்ஸி செய்யப்பட்டு இம்மாதிரியான இரத்த சோகைக்கு இம்மருந்தை கொடுக்கவேண்டியிருக்கிறது.

நமது லாபரெட்டரியிலும் நமது ஆசிரியரின் மேற்பார்வையின் கீழும் சிற்சில லாபரெட்டரி முறைகள் கையாளப்பட்டு தக்க மருந்துகள் கொடுக்கும் முறை கையாளப்படுகிறது.

மற்றுமோர் உதாரணம் டாக்டர் பர்னட் எழுதிய ட்யூமர் என்ற புத்தகத்தை படியுங்கள். அதில் ஓர் பெண்



ணின் தலைவலியைப் பற்றி விவரம் வருகிறது. ஆராய்ச்சி அறிவு இல்லாமல் குறிகளை கொண்டு மாத்திரம் வைத்தியம் செய்வது பயனற்றது என்பது விவரிக்கப்பட்டுள்ளது.

(இம்மாதிரியான ஆராய்ச்சித் திறன் தென்னிந்தியாவிலேயே நம் ஆசிரியரிடம் தான் விளங்குகிறது என்பது இங்கு குறிக்கப்பட வேண்டியிருக்கிறது.)

மேற்சொன்ன பெண்ணிற்கு பெல்லடோனா என்ற மருந்து அடிக்கடி கொடுக்கப்பட்டு குணமளித்தது. அந்தோ பரிதாபம்! அப்பெண் கொஞ்ச நாட்கழித்து இறந்து விட்டாள்.

பிறகு மூளையை அறுத்து பரிசோதனை செய்ததில் மூளை க்ஷயரோக முட்டுக்கள் காணப்பட்டன.

ஆகவே வியாதி எவ்வளவு தூரம் அவயவங்களைத் தாக்கி இருக்கிறது, என்ன மருந்துகளை உபயோகித்தால் அவயவங்கள் தாக்கப்பெறும் என்பதையும் அறிந்துகொண்டு மருந்து கொடுத்தால்தான் **பூரண குணம்** ஏற்படும் என்பது நிச்சயம்.

ஆகவே குறிகளை கவனித்து மருந்து கொடுத்தால் போதுமென்பது ஹோமியோபதி மருத்துவ முன்னேற்றத்திற்கே தடையாகும் என்பது திண்ணம்.

**1. T. முத்துராமன்,** வடகரை.

போலிப் பிரசாரத்திற்குக் குறைவற்ற இன்னாளில் தென்னாட்டில் உண்மையான வைத்தியத்தின் மூலம் ஹோமியோபதிக்கு புகழை தேடித் தரும்பிரபல டாக்டரான நீங்கள் நமது டாக்டர்கள் சங்கத்தினுதாவில் ஒரு "Mobile Dispensary" நிறுவி அதன் மூலமாக மூலை முடுக்குகளில் உள்ள மக்களுக்கு சேவைசெய்தால் என்ன?

தங்கள் ஆலோசனைக்கு மிக்க நன்றி "நடமாடும் ஆஸ்பத்திரி" வைத்து நடத்தவேண்டியது அவசியமே. அவற்றில் குறிப்பிட்ட வியாதிக்கே நிவாரணம் செய்யலாமே தவிர எல்லா வியாதிக்கும் செய்ய முடியாது. 1954-ம் வருடமே எங்களால் இத்திட்டம் கையாளப்பட்டு ஹோமியோபதியரின் ஒற்றுமைக் குறைவால் கைவிடப்பட்டது.

ஹோமியோபதி டாக்டர்கள் ஆங்காங்கே ஒன்று கூடி குறிப்பிட்ட சில நோய்களுக்காக இன்னின்ன நாட்களில் எங்கள் டாக்டர் சேவை செய்யவேண்டும் என்று வற்புறுத்தினால் எங்கள் டாக்டர் மறுக்கத்தானியலுமோ? இது மற்ற ஹோமியோபதி டாக்டர்கள் கையில் தானிருக்கிறது.

## வட்டாரச் செய்திகள்.

—o—

அரசு ஜெர்மன் கிளினிக், திருக்கழுக்குன்றத்தில் நடத்திவரும் டாக்டர் எஸ். என். சண்முகம் அவர்கள் மற்றும் அரசு ஆஸ்பத்திரி என்ற பெயரில் திருக்கழுக்குன்றத்திற்கு அடுத்த களத்தூரிலும 2-2-61 வியாழக்கிழமை முதல் சிறப்பான முறையில் துவக்கி நடத்துகிறார். அன்னார் தொழில் மேன்மேலும் பெருக இறைவன் அருள் புரிவாராக.

புதுக்கோட்டை மாவட்ட ரிஜிஸ்டர்ட் ஹோமியோபதியர்களின் சங்கம் 5-2-61 அன்று பாலவனம் ஜமிந்தார் பெரிய ராஜா தலைமை கூடி சங்க மாதாந்திரக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் 2-வது ஞாயிறு அன்று கூட வேண்டும் என்றும், சந்தா உடனடியாக மெம்பர் செலுத்தவேண்டும்



என்றும், ஏப்ரல்-மீ 10உ டாக்டர் ஹானிமானின் பிறந்த தினத்தை விமரிசையாக கொண்டாட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேறிய பின் கலைந்தது.

—o—

தஞ்சை ஜில்லா ஹோமியோபதி சங்கத்தின் 14-வது வருடாந்திர பொதுக் குழுக் கூட்டம் 5—2—61 அன்று நடந்தது. இவ்வாண்டிற்கு டாக்டர் V. R. மூர்த்தி தலைவராகவும், P. R. நடராஜ அய்யர் காரியதரிசியாகவும், மற்றும் பல காரியக் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

—o—

தென் சென்னை பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்களின் மாதாந்திரக் கூட்டம் பிப்ரவரி 26உ சுமார் மாலை 4-மணிக்கு இராமகிருஷ்ண மடம் ரோடு பால நிலயத்தில் டாக்டர் ஸி. ஜே போர்ஜியா தலைமையில் நடந்தது. டாக்டர் M. S. மணியம் "அலோபதியும், ஹோமியோபதியும்" என்பதைப் பற்றி பேசும்போது மற்ற வைத்தியர்கள் முழு நேரத் தொழில் புரியும்போது நம்மிடையே இருதொழில் புரிவோரும் இருப்பதால் ஹோமியோபதி தொழிலுக்கும் பதவிக்கும் இடைஞ்சல் ஆகும் என்றார். மறு கூட்டத்தில் போர்ஜியா காலராவைப் பற்றி பேசு ஒப்புக்கொண்டார்.

—o—

19—2—61-ல் திருச்சியில் நமது அகில தமிழ்நாடு பாகல்டி ஆப் ஹோமியோபதிக் மெடிஸன் கழக வருடாந்திர மகாசபை Dr. J. S. இராமானுஜ அய்யங்கார் B. A., B. L., M. D. H. தலைமையில் கூடி 1961-ம் வருட செயற்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தது.

223999
சென்னை-600 00

தலைவர்: டாக்டர் J S. இராமாநுஜ அனந்தர், B. A ; B. L ; M D H.

உப-தலைவர்: E. அப்துல் ஜப்பார்.

செயலாளர்: M. U அப்துல் கப்பார்.

செயற்குழு உறுப்பினர்கள்: Drs.

G. A. B. சார் B. A.
S. A G. இராபி.
V. தாண்டவம்.
V. மகாதேவன்.
ஹரிஷ் N. ஜாவேரி
P. S. குழந்தைவேலு.

வட சேலம் பதிவுபெற்ற

## ஹோமியோபதி மருத்துவர் சங்கம்.

5—3—61-ல் Dr. J. M. முருகேசம் தலைமையில்கூடி 2—4—61-ல் 2-வது வருடக் கணக்கு பரிசிலனையும், ஜெனரல்பாடி கூட்டமும், கமிட்டித் தேர்வும் நடைபெறும் என்பதையும் 10-4-61-ல் ஹானிமான் பிறந்த தினத்தன்று எளியோர்களுக்கு இலவசமாக மருந்தளித்தல் வேண்டும் என்பதையும் முக்கிய தீர்மானங்களாகக்கொண்டு முடிவுற்றது.

## அனுபவக் கேஸ்.

—o—

Dr. A. மனோகரன் கோம்பை.

6—2—61ல இரவு நல்ல நித்திரையிலிருந்த என்னை ஒருவர் எழுப்பினர். உடனே எழுந்து என்ன என்று வினவினேன். அதற்கு அவர் என் மைத்துனனுக்கு வயிற்று



வலி என்று சொன்னர். நான் மேக் பாஸ் 30 x 3 வேளை வெந்நீரில் கலந்து ½ மணிக்கொருமுறை சாப்பிடச் சொல்லி அனுப்பினேன்.

மறுநாள் காலை எது கொடுத்தாலும் வாந்தியாகி விடுகிறது என்றும் வயிற்று வலி அதிகமாகிறது என்றும் தகவல் கிடைத்தது

உடனே நமது தயாரிப்பான டைஜெஸ்டின் I. V. இன்ஜெக்ஷன் செய்தேன். 3 நிமிடத்தில் "எனக்கு இப்போது நன்ருய் உள்ளது" என்று கூறி இலேசாக புன்னகை பூத்து மகிழ்ந்தார். இப்படிப்பட்ட அருமையான தயாரிப்பை தயாரித்தனுப்பிய தங்கட்கு (Dr. சீனிவாசன்) என் நன்றி கலந்த வணக்கமும், வாழ்த்தும் உரித்தாகுக.

## "திருக்குறளார்" கூறிய ஹோமியோபதியர்.

(நமது நிருபர்)

—o—

கள்ளோ! காவியமோ?

என்ன இழவு வைத்தியமோ! மாதக்கணக்கில் மருந்து சாப்பிட்டேன் பலன் ஏற்படவில்லை என்று சதா சலித்துக் கொண்டிருக்கும் நோயாளி கூட புகழ்ந்து பேசக்கூடிய ஒரு வைத்தியமுறை உண்டு என்ருல் அது ஹோமியோபதி முறை தான்.

இவன் குடிகாரனே? என ஐயுற்று அவன் கையில் மூடி மறைக்கப்பட்டிருக்கும் பொருளைப் பார்த்து ஐயோ

இது என்ன கள்ளோ? என்று ஒதுங்கிப் போகையில் அவன் கையை எடுக்கிறான். காவியம் பிரகாசிக்கிறது. குடிகாரன் என்று இவனைக் கருதினோமே! இவனிடம் சிறப்பான காவியம் அல்லவா பிரகாசிக்கிறது. மட்ட வைத்தியம் கெட்ட வைத்தியம் என்றல்லவா கூறினார்கள் இந்த ஹோமியோபதி வைத்தியத்தை! இது பெருமை உணர்ந்த பின்பு அல்லவா தெரிகிறது நமக்கு என்று கருதி, எத்தனையோ நோயாளிகள் உணர்ந்து அதன் பெருமையை நாட்டுக்கு உணர்த்தி வருகிறார்கள் என்றால் அதற்கு இதை நாடெங்கும் பரப்பி வரும் ஸ்ரீனிவாசன் அன்றோ காரணம் என்று டாக்டர் அருள்மணி கூறினார்.

## அப்பப்பா பாராட்டு.

டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்கள் பல புதிய மருந்துகளை கண்டுபிடித்து தந்து ஹோமியோபதியை வளர்த்துவருகிறாரே அவருடைய சேவையை நாட்டுக்கு, தெரிவிக்கவேண்டாமா? அதற்காக அவருக்கு ஓர் பாராட்டு விழா வலங்கைமானில் டாக்டர் அருள்மணி தலைமையில் நடந்தது.

விழாவில் டாக்டர் ஸ்ரீனிவாசன் கலந்துகொண்டு பேசுகையில் அப்பப்பா பாராட்டா? அது எனக்கு வேண்டாம்! என்னை பாராட்டுவது என்றால் உண்மையான மனதுடன் தெளிவான சிந்தனையுடனும் ஹோமியோபதிக்கு ஹோமியோபதியர்கள் சேவை செய்வது தான் பாராட்டு. ஹோமியோபதி வைத்தியர்கள் முதலில் ஹோமியோபதி வைத்தியத்தை நம்பவேண்டும். அடுத்து மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் நடக்கவேண்டும் என்று ஸ்ரீனிவாசன் கேட்டுக்கொண்டார்.



## வீண் பெருமையா?

திருக்குறளார் வீ. முனுசாமி கூறினார் "நல்லது யார் செய்தாலும் அவரைப் பாராட்டும் பெருங்குணம் தமிழர்களுக்கே உரிமையானது. ஸ்ரீனிவாசனைப் பாராட்டுவது தனிப்பட்ட முறையில் அல்ல. அவர் செய்த சேவை அவரைப் பாராட்ட நம்மை இழுக்கிறது. அவரிடம் 'சேவை' என்னும் காந்தம் இருக்கிறது. அவரை நோக்கி நாம் இழுக்கப்படுகிறோம்.

நாடு வர வர கெட்டுவிட்டது. மக்கள் வீண் பெருமை பேசியே காலம் கழித்து வருகிறார்கள். உறுப்படியாக நாட்டுக்கு மனிதனாகப் பிறந்தவன் ஏதாவது செய்யவேண்டும். அந்த முறையில் செய்பவர் குறைவு. அதனால் பல வழிகளில் நாடு குட்டிச் சுவராகி விடுகின்றது.

## ஏலம் போன வீடு.

ஏலம் போன வீட்டின் கதையாக தமிழன் இருக்கக் கூடாது. நண்பனிடம் தன்னைப் பற்றி பெருமையாக பேசுகிற ஒருவன் முந்தாநாள் ஏலம் போன வீட்டின் பெருமையைப் பேசுவதில் பயன் இல்லை. இன்று நிலை என்ன அதைக் கூற வேண்டும்? ஹோமியோபதி சிறந்த வைத்தியம்; அலோபதி மேதையான ஹானிமான் அதைவிடச் சிறந்த முறையாக ஹோமியோபதியைக் கண்டார்.

(தொடரும்)

குறிப்பு:—

கீழ்க்கண்டபடி நமது லாபொரட்டரியில் பலவித இரத்தப் பரிசோதனைக்காக கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

1. டிப்ரான்ஷியல் கவுண்ட் (D. F. C.) (வெள்ளை செபி களின் பல பேதங்களை தனித் தனியே எண்ணுவது.)

கட்டணம் ரூ. 3—00.

2. சிவப்பு செபி, வெள்ளை செபி இரத்தத்தில் எவ்வளவு என்பதை எண்ணுவது. (R B:C+W. B C.)

கட்டணம் ரூ 5—00.

3. E. S. R. (சிவப்பு இரத்த செபிகள் படியும் நேரம்)

கட்டணம் ரூ. 5—00.

4. இரத்தத்தில் க்ஷயரோக பூச்சி, கிரந்தி பூச்சி முதல்ான வைகளை கண்டுபிடிப்பது.

கட்டணம் ரூ. 5—00.

5. கோழை பரிசோதனை. கட்டணம் ரூ. 5—00.

6. மலப் பரிசோதனை. கட்டணம் ரூ. 3—00.

7. சிறுநீர் பரிசோதனை. கட்டணம் ரூ. 3—00.

—o—

இதற்கு ஸ்லேடுகள் கீழ்க்கண்ட விலைக்கு அனுப்பப்படும்.

1 ஸ்லேடு விலை ரூ. 0—13. குறைந்த பட்சம் 12 ஸ்லேடாவது ஆர்டர் செய்யவேண்டும்.



இரண்டாவது பரிசோதனை மூலமாக இரத்த செபிகளை எண்ணுவதற்காக நீங்கள் சிரை (vein) யினின்று 2 சி. சி. அளவு இரத்தம் எடுத்து அனுப்பவேண்டும். அந்த இரத்தம் உறைந்து விடாதிருக்க ஆக்ஸலேட் உப்புகள் அடைத்த ஆம்புல்கள் கீழ்க்கண்ட விலைக்கு கிடைக்கும். இரத்தத்தை எடுக்கும்போது கிருமி நாசம் செய்யப்பட்ட சிரிஞ்ச் மூலமாக எடுக்கவேண்டும். தண்ணீர் சிறிதுகூட இருத்தல் கூடாது. ஆம்புல்களில் உடனே இரத்தத்தை நிரப்பி, குலுக்கி, வாயை தேன் மெழுகிட்டு மூடி பத்திரமாக பார்சலில் அனுப்ப வேண்டும். பார்சலின் மேல் "பரிசோதனைக்காக இரத்தம்" என்று எழுதி அனுப்பவேண்டும்.

12 ஆம்புல்கள் விலை ரூ. 0—75.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

—o—

ஹோமியோ பிரகடனத்திற்கு

சந்தாதாரராகச்
சேர்ந்துவிட்டீர்களா?

வருட சந்தா ரூ. 3—00தான்
உடனே சேருங்கள்.

## நேயர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

*ஹோமியோபதி வைத்தியம், விஞ்ஞானம் போன்ற விஷயங்களை பற்றிய வினாக்களுக்கு நமது ஆசிரியர் அவர்களே விடையளிப்பார்கள். ஒருவரே ஒரு தடவையில் மூன்று வினாக்கள்வரை எழுதலாம்.*

*கேள்விகளை விபரமாகவும், தெளிவாகவும் எழுதி விலாசத்தையும் நன்றாக குறிப்பிட்டு அனுப்பவும். கார்டில் விலாசத்தை எழுதவேண்டிய பகுதியில் விலாசத்தை எழுதாமல் அடியில் இருக்கும் கூப்பனைக் கத்தரித்து, அதைக் கார்டில் ஒட்டி அஞ்சல் செய்து விடவேண்டும். கவரில் அனுப்பப்படுகிற கேள்விகளுக்கும், கூப்பன் ஒட்டாமல் எழுதி அனுப்பும் கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட மாட்டாது.*

*கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது பதில் அளிக்காமல் நிறுத்திவைக்கவோ, திருத்தி அமைக்கவோ ஆசிரியருக்கு பூரண அதிகாரம் உண்டு கேள்விகளின் முக்கியத்துவத்தை பொருத்து வரிசை கிரமத்தில் பதில் அளிக்கப்படுமாகையால் இது சம்பந்தமாக கடிதப் போக்கு வரத்துக்கள் கவனிக்கப்பட மாட்டா.*

*கேள்விகள் அனுப்புவோர், தங்கள் முழுவிலாசத்தையும் சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுதவேண்டும்.*

இங்கே கத்தரிக்கவும்:

"ஹோமியோபதி"
"கேள்விப் பெட்டி"
ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,
த. பெ. எண். 19
திருவாரூர்.
March 61.



# திருவாரூர்
# 24-வது 'A' நேர்முக வகுப்பு.

**ஏப்ரல் மாதம் 17-ம் தேதி முதற்கொண்டு 12 நாட்கள் நடத்தப்படும்.**

வழக்கப்படி சட்டதிட்டங்கள் அனுசரிக்கப்படும்.

**இவ்வகுப்பிற்கு கட்டணம் ரூ. 50/- என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.**

விண்ணப்ப பாரத்துடன் ரூ. 5/- பதிவுக் கட்டணத்தையும் சேர்த்து 25—3—61-க்குள் எங்களுக்கு கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும்.

சிலோன், மலேயாவிலிருந்து வருபவர்கள் உடனே பூராத் தொகையையும் எங்களிடம் செலுத்திவிட வேண்டும்.

(25-வது நேர்முக வகுப்பு மே மாதம் 8-ம் தேதி முதற்கொண்டு 12 நாட்கள் நடத்தப்படும்.)

## பூதக்கண்ணாடி
## (மைக்கிராஸ்கோப்) யின் உதவியினால்

இரத்தப் பரிசோதனை.
இரத்தக் கெபிகளின் எண்ணிக்கை.
மற்ற கிருமிகள் கண்டுபிடிப்பது.
மலம், கோழை பரிசோதனை.
இவைகளைக் கற்றுத் தரவும்.

என்னென்ன கிருமிகள் இருந்தால் என்னென்ன வியாதிகள் உண்டாகுமென்றும் விபரமாக அறிந்துக் கொள்ள

## "ஒரு ஸ்பெஷல் வகுப்பு"

நமது 24-வது நேர்முக வகுப்பின் கூடவே 3 நாட்களுக்கு தனியாக நடத்தப்படும்.

இதை மாத்திரம் கற்றுக்கொள்பவர்கள் கட்டணம் ரூ. 15/- கட்டவேண்டும்.

நமது நேர்முக வகுப்பு மாணவர்கள் மாத்திரம் ஷ வகுப்பிற்கு தனியாக மேற்கொண்டு ரூ. 10/- செலுத் தினால் போதுமானது.

இதற்காக தனி விவரங்கள் அச்சிட்டுக் கொடுக்கப் படும். மேற்சொன்ன பூதக்கண்ணாடி பரிசோதனை தெரிந்திருப்பது ஹோமியோபதியர்களின் முன்னேற்றத் திற்கு ஒரு திறவு கோல்.

---



நம் மருந்துகள், இன்ஜெக்ஷன்கள் முதலியவை கீழ்கண்ட இடங்களில் எப்பொழுதும் கிடைக்கும்.

—o—

தஞ்சாவூர் ஜில்லா:

1. Dr. M. சம்பந்தம்,
*சரஸ்வதி மெடிகல் ஸ்டோர்ஸ், தெற்கு வீதி, தஞ்சாவூர்.*

2. Dr. P. G. ராஜன்,
*ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், நீடாமங்கலம்.*

3. Dr. P. தங்கராசு, *முத்துப்பேட்டை.*

4. Dr. S. A. பகூதீத் அஹமத்,
*வடகரை, மாயவரம் தாலுக்கா.*

5. Dr. R. V. நாதன், *சீர்காழி.*

திருச்சி ஜில்லா:

6. M/s. சரசு ஹோமியோ மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
116/9, *பாலக்கரை, திருச்சி—8.*

7. Dr. V. மகாதேவன்,
*திருச்சி ஹோமியோ மெடிக்கல் ஸ்டோர்ஸ்,*
34, *சிங்காரத்தோப்பு, திருச்சி—8.*

8. Dr. S. நாராயண அய்யங்கார்,
*லெக்ஷ்மி ஹோமியோ ஸ்டோர்ஸ், துறையூர்.*

9. M/s. கமலா மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
நெ. 13, சுந்தர் மெயின் ரோடு, குளித்தலை.

10. Dr R. மாரிமுத்து செட்டியார்,
மெயின் பஜார் ரோடு, மணப்பாரை.

மதுரை ஜில்லா:

11. Dr. M. கோபாலகிருஷ்ணன்,
26, பாண்டிய வேளாளத் தெரு, மதுரை.

12. Dr. O. V. நரசிம்மன்,
மதுரை ஹோமியோ ஸ்டோர்ஸ்,
223, சின்னக்கடைத் தெரு, மதுரை.

13 Dr. A. K. ஷம்ஸுதீன்,
ஹோமியோ மெடிக்கல் ஷாப்,
மெயின் ரோடு, திண்டுக்கல்.

திருநெல்வேலி ஜில்லா:

14. M/s. D. S. ஆபிரகாம் & கோ.,
மருந்து ஷாப், நாசரேத் & திருநெல்வேலி ஜங்
& ஆறுமுகநேரி.

15. M/s. அந்தோனி ஸ்டோர்ஸ், நாசரேத்.

16. Dr. M. M. சேவியர்,
ஹோமியோ மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
131, மார்க்கெட் பஜார், தென்காசி.



ராமநாதபுரம் ஜில்லா:

17. Dr. R. பள்ளிக்கொண்டப்பெருமாள்,
கோமதி மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
சங்கரநயினார்கோயில்.

கோயமுத்தூர் ஜில்லா:

18. Dr. K. தாமோதரன்,
ஐக்கிய வைத்திய நிலையம்,
100 அடி ரோடு, கோயமுத்தூர்.

19. Dr. P. R. ராஜு
ஜெர்மன் ஹோமியோ ஸ்டோர்ஸ்,
பல்லடம் ரோடு, திருப்பூர்.

20. M/s. ஜானி பார்மஸி,
வசந்தா ரோடு, தாராபுரம்.

சேலம் ஜில்லா:

21. Dr. M. P. குணவான் சிங்,
சிங்க் டிரக் ஸ்டோர்ஸ்,
40, அரிசிபாளையம், சேலம்—2.

22. Dr. A. சுப்ரமணியம்,
மேட்டூர் கோவாப்பரேட்டிவ் தொழிலாளர்
பண்டகசாலை, லிமிடெட், மேட்டூர் அணை.

23. Dr. R. பாலுசாமி,
பாலு பார்மஸி, ஆத்தூர் ரோடு, ராசிபுரம்.

தென் ஆற்காடு ஜில்லா :

24. **Dr. G. R. S. மூர்த்தி,**
இந்தியன் மெடிக்கல் ஸ்டோர்ஸ், சிதம்பரம்.

சிங்கப்பூர்:

25. **Dr. N. K. S. அய்யூப்,**
(110, East Coast Road) சிங்கப்பூர்—16.

சிலோன்:

26. **Dr. A. கிருஷ்ணசாமி,**
ஐந்துசந்தி, முசிலிம் வார்டு, யாழ்பாணம்.

# 'ஆர்னிகா' ஹேர் ஆயில்.

'ஆர்னிகா' சத்து கலந்த சிறந்த நறுமணமுள்ள வாசனைத் தைலம். தலைப்பொடுகு, மயிர் உதிர்தல் மயிர்க்காம்பு வியாதிகள், ஒற்றைத் தலைவலி, இவைகளை குணப்படுத்தும்.

4 அவு. பாட்டில் ரூ. 2—50

# 'காந்தரிடின்' ஹேர் ஆயில்.

'காந்தரிஸ்' சத்துடன் தயாரித்த நறுமணம் வீசும் ஹேர் ஆயில், தலைமயிர் உதிர்தல் வழுக்கை, பொடுகு முதலியவற்றை குணப்படுத்தும்.

4 அவு. பாட்டில் ரூ. 1—62

# மருக்கொழுந்து ஸ்நானத் தைலம்.

ஸ்நானத்திற்கு உகந்த நறுமணம் வீசும் தைலம். மூளைக்கும் கண்ணிற்கும் குளிர்ச்சி ஊட்டி, வெட்டைச் சூட்டைத் தணிக்கும் சிறந்த தைலம்.

2 அவு. ரூ. 0—62
5 அவு. ரூ. 0—25

பெரிய சைஸ்களுக்கு தனியாக எழுதவும்.

# சில ஸ்பெஷல் தயாரிப்புகள்.

## லாசோன்.

(ஹோமியோபதி தயாரிப்பு)

சிறந்த கருப்பாசய டானிக். தாது உப்புகள், விபர்னம், அலெட்ரிஸ், லாசோன் அசோகா மற்றும் சில டிஞ்சர்கள் சேர்த்து ஹோமியோ முறையில் தயாரிக்கப் பட்டது.

எல்லாவிதமான ஸ்திரிகளின் வியாதிகளையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

4 அவுன்ஸ் பாட்டில் ரூ. 3—00

⊕

## பயோபாஸ்பேட்ஸ்.

(ஸ்பெஷல் ஹோமியோபதி முறைப்படி செய்தது)

இதில் பெர்ரம், கால்சியம், கேலியம், மெக்னீஷியம், சோடியம், மேங்கனீஸ், சிங்க் முதலியவைகளின் பாஸ் பேட்டுகள் தகுந்த அளவில் கலக்கப்பட்டிருக்கின்றன.

சிறந்த ரத்த விருத்தி, நரம்பை பலப்படுத்தும் தாது உப்பு டானிக், இனிப்பானது, நவீனமானது.

6 அவுன்ஸ் பாட்டில் ரூ. 5—00

(ஆல்கஹால் கலவாதது)

## ஹோமோகால்சின்:

கால்சியம் போஷாக்குகளுக்கு சாக்லெட் ருசியுள்ள டானிக் க்ரானியுல்கள். புதுமையான மருந்து சக்திவாய்ந்த மருந்து.

கால்சியம் சுண்ணாம்பு சத்து தேவையுள்ளவர்களுக்கு ஒரு வேளை தினம்.

4 அவுன்ஸ் பாட்டில் ரூ 3—62

⊕

## அல்பால்பா B:

அல்பால்பா, நக்ஸ், அவனு, சைனு, அஸ்வகந்தா இவைகளுடன் இயற்கை வைடமின் B, C, முதலியவைகள் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ருசியான பொதுவான புஸ்டி தரும் டானிக்.

4 அவுன்ஸ் ரூ. 3—25.

⊕

## ஹெபடோனின்:

வீரியக் குறைவையும் முதுமையையும் மாற்றி, வலிமை யூட்டும் சுரப்பிகளின் டானிக்

30 வயதுக்கு மேற்பட்ட யாவரும் கைவசம் வைத்து சாப்பிடவேண்டியது.

4 அவுன்ஸ் ரூ 4

# ஞாபகம் வைத்துக்கெள்ளுங்கள்.

காபில்சிரப் : ஆஸ்துமா ஸ்பெஷல் தயாரிப்பு

கார்டியாடோன் : சிறந்த இருதய நோய் நிவாரணி.

ஷார்க் ஆரஞ்சு : அயம், கால்சியம், தாது உப்புக்களும், பழ சத்துகளும் சேர்ந்த வலிவூட்டும் டானிக்.

எபடால் : ஹோமியோபதி முறையிலேயே சிறந்ததொரு இருமலை நிவர்த்திக்கும் சிரப்.

---

# பெண்களுக்கு.

---

லாசோன் : கருப்பாசய டானிக்.

ஏஸ்ட்ரால் : பெண் ஹார்மோன் சத்து.

டெலிவரிசி சுகப்பிரசவ மருந்து (பாரதம் முழுவதும் பிரசித்திப்பெற்றது.)

கிட்டிடிராப்ஸ் : குழந்தை வளர்ச்சிக்கு சொட்டு டானிக்.

பலன்சா : மூலத்திற்கு.

பாலாசவி : குழந்தை ஈரல்குலை கட்டிகளுக்கு சிறந்த மருந்து.

## FORM IV.

(See Rule 8.)

1. Place of Publication ... ...
2. Periodicity of its Publication ... Monthly.
3. Printer's Name ... T. G. Narayanaswami Pillai.
   Nationality ... Hindu.
   Address ... Krishna Press, Nethaji Road, Tiruvarur.
4. Publisher's Name ... Dr. S. Srinivasan.
   Nationality ... Hindu.
   Address ... Kamalalayam North, Tiruvarur.
5. Editor's Name ... Dr. S. Srinivasan.
   Nationality ... Hindu.
   Address ... Kamalalayam North, Tiruvarur.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.

I, Dr. S. Srinivasan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 15—3—1961.

Signature of Publisher : Dr. S. Srinivasan.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223999

Regd. No. M. 6180.

# -: ஹோமிசிலின் :-

நவீன விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'ஹோமியோபதி' பெனிசிலின் போன்ற பவுடர் ரூபமுள்ள ஒரு மருந்து.

கடுமையான நீர் சுருக்கு, சிறு நீர்த் தாரையில் கனம், வெட்டை, கிரந்திப்புண்கள், சொரிசிரங்குகள், சீழ்பிடிக்கும் இரணங்கள், நாள் பட்ட சீழ், விஷசுரங்கள், விஷசுரங்களில் ஏற்படும் அதிகாரம், பிரசவ சன்னி, கருப்பைப் புண்கள், கடுமையானவலி, அக்கி, இன்புளுயன்சா, கடுமையான சுரங்கள் முதலியன குணமாகும்.

உள்ளுக்கும், இன்ஜெக்ஷனாகவும் உபயோகிக்கலாம்.

புதிய மருந்து! புது பார்க்கிங்!

Edited and Published by: Dr. S. SRINIVASAN, Tiruvarur
and Printed by: Sri T. G. Narayanaswamy Pillai,
Krishna (Power) Press, Tiruvarur.